بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

March 21
2014

**மொழியாக்கம் : மவ்லவி M.B. தாஹிர் அஹ்மது சாஹிப்**

# மஸீஹ் மவ்வூது தினம்

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

இன்று நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய உண்மைத்துவம், அடையாளங்கள், அற்புதங்களைப் பற்றி எழுதியவைகள், மேற்கோள்கள் மற்றும் கூற்றுகளை எடுத்துக் கூறுவேன். ஆனால், அதற்கு முன்பு நான், கடந்த ஜுமுஆ குத்பா தொடர்பாகவும் ஒருசிலவற்றைக் கூற விரும்புகிறேன். கடந்த குத்பாவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைஞானத்தின் முக்கியத்துவம் மற்றும் அதனை அடையும் வழிமுறைகள் தொடர்பாக கூறியிருந்த சில மேற்கோள்களைப் படித்துக் காட்டினேன். மேலும், கஷ்டமான சிலவற்றையும் விளக்கி இருந்தேன். ஆனால், பிறகு அந்த குத்பாவின் ஆரம்ப ஆங்கில மொழியாக்கத்தைக் கேட்டபோதும், பிறகு அல்ஃபஸ்லில் வெளிவருவதற்காக எழுத்து வடிவில் என்முன் வந்தபோதும், ஒரு மேற்கோள் சரியான முறையில் விளக்கப்படவில்லை என்று நான் உணர்ந்தேன். இதன் காரணமாக, பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்பவர்களுக்கு கஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். இதுபோன்று, எழுத்து வடிவில் கொண்டு வருபவர்களுக்கும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இன்று நான் அந்த மேற்கோளின் ஒரு சில வரிகளை அல்லது அதன் சில பகுதிகளைப் படித்து எளிய வார்த்தைகளில் அதனை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன் அல்லது எடுத்துக் கூற முயற்சி செய்வேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்; புரிய வேண்டும். இறை ஞானம் இல்லாமல் இறைகட்டளைகளை அமல் செய்ய இயலாது என்பதை விளக்கியவாறு ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

அறிவையும், இறைஞானத்தையும் இஸ்லாத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ளும் வழியாக இறைவன் ஆக்கியுள்ளான். இஸ்லாத்தின் உண்மைத்துவத்தைப் பெறுவதற்கு பல வழிகள் இருந்தாலும், உதாரணமாக, நோன்பு, தொழுகை, பிற எல்லா இறை கட்டளைகள் அவை 600 –ஐ விட அதிகமாகவே இருந்தாலும், ஏகத்துவம் மற்றும் அவனது தனித்தன்மையின் மகத்துவம் குறித்த அறிவு அவனது கம்பீரம் மற்றும் மென்மை குறித்த ஞானம், அல்லாஹ்வின் பண்புகளைக் குறித்த ஞானம் போன்ற இவை அனைத்துமே எல்லாவற்றிற்கும் அடிப்படையானதாகும். இதன் மூலமே இறைவனைப் பற்றி அறிய வேண்டிய அளவுக்கு அறிய முடியும்.

ஒருவர், கவனமற்ற உள்ளத்துடனும், இறைஞானம் குறித்து முற்றிலும் வாய்ப்பிழந்தவராகவும் இருக்கிறார் எனில், அவர், நோன்பும், தொழுகையை கடைபிடிக்கவும், துஆ செய்யவும், அதுபோன்று மற்ற நற்செயல்களில் ஈடுபடவும் எப்போது வாய்ப்பினைப் பெறுவார்? இந்த அனைத்து நற்செயல்களுக்கும் தூண்டுதல் இறைஞானமேயாகும். பிற அனைத்தும் இதன் குழந்தைகளாகும். இது ஒரு முக்கியமான மேற்கோளாகும். எனவே தான் சாதாரண மக்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இதற்கு சற்று விளக்கம் கொடுப்பதை அவசியம் எனக் கருதினேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதல் அடிப்படை விஷயமாக என்ன கூறியுள்ளார்கள் என்றால், எவரொருவர் ஆழ்ந்து அதனுடைய அறிவு மற்றும் ஞானத்தைப் பெற முயற்சி செய்கிறாரோ அவருக்கு தான் இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெரிய வரும் அல்லது அறிவு மற்றும் ஞானம் கிடைக்க வேண்டும் என முயற்சி செய்யப்படும் போது அது தெரிய வரும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இஸ்லாத்தின் உண்மைத்துவத்தை அடைவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன. எவர் இந்த வழிமுறைகளை அடைகிறாரோ அவருக்கு தான் இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெளிவாகும். பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இந்த வழிமுறைகளை அடைய முயற்சி செய்யும் போது தான் இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெளிவாகும். பல்வேறு வழிமுறைகள் உள்ளன. இந்த வழிமுறைகளை அடைய முயற்சி செய்யும் போதுதான் இஸ்லாத்தின் உண்மைத்துவம் தெளிவாகும். இந்த வழிமுறைகளில் தொழுகை, நோன்பு, துஆ, மேலும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அனைத்து இறை கட்டளைகளும் அடங்கும். ஒரு கணிப்பின்படி அதன் எண்ணிக்கை 600 –ஐ விட அதிகமாகும். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். இறைவனுடைய மகத்துவத்தின் அறிவு மற்றும் ஞானம் கிடைக்கவில்லையாயின், தொழுகையின் உண்மைத்துவத்தையும் அறிய இயலாது. அதாவது உண்மையில் தொழுகையின் கடமையை நிறைவேற்ற இயலாது. நோன்பின் கடமையை நிறைவேற்றவும் முடியாது. துஆவின் உண்மைத்துவம் பற்றிய அறிவும் இருக்காது. மேலும் திருக்குர்ஆனின் மற்ற கட்டளைகளின் சரியான அறிவும் புரிதலும் இருக்காது. இறைவனுடைய மகத்துவம் பற்றிய அறிவும், இறை ஞானமும் இருக்கும் போதுதான் இந்த அனைத்து விஷயங்களின் ஆழ்ந்த முக்கியத்துவம் மற்றும் உண்மைத்துவத்தைப் பற்றிய அறிவு கிடைக்கும். எப்போது இறைவனின் ஏகத்துவம் பற்றிய ஞானம் இருக்குமோ, அவன் ஒருவனே இறைவனாவான். அவனைத் தவிர இறைவன் இல்லை என்ற நம்பிக்கை இருக்க வேண்டும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

இறைவனின் பல்வேறு பண்புகள் உள்ளன. அதில் கம்பீரமான பண்புகளும் உள்ளன. மென்மையான பண்புகளும் உள்ளன. அவற்றின் புத்தம் புதிய மகத்துவங்கள் பற்றிய புரிதலும், ஞானமும் இல்லையென்றால் அதுவரை இறை கட்டளைகளின்படி அமல் செய்ய இயலாது. இறை பண்புகளைப் பற்றிய அறிவு இருக்குமேயானால் அவனின் கட்டளையின்படி சரியான முறையில் அமல் செய்ய இயலும். ஆக, தொழுகை, நோன்பு மேலும் மற்ற கட்டளைகளின் ஆன்மாவை புரிய வேண்டும் என்றால் அல்லாஹ் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் கூறுகிறான்:

**(55:30)** كُلَّ يَوْمٍ هُوَ فِي شَأْنٍ அதாவது, ஒவ்வொரு வேளையும் அவன் ஒரு புதிய மகத்துவத்தில் இருக்கிறான் என்ற அந்த ஞானத்தைப் பெறுவது அவசியமாகும். ஆக, இஸ்லாத்தின் உண்மைத்துவம் மற்றும் இறை வணக்கங்கள், இறை கட்டளைகளைப் புரிவதற்கு அடிப்படை அல்லாஹ்வின் மகத்துவம் பற்றிய அறிவு, அவனின் ஏகத்துவம் பற்றிய அறிவு, அல்லாஹ்வின் கம்பீரமான, மென்மையான பண்புகளின் பல்வேறு கோணங்களின் அறிவு, மகத்துவம் பற்றிய அறிவு இருப்பதும் அவசியமாகும். இந்த பண்புகளுக்கே பல்வேறு மேன்மைகள் உள்ளன. அல்லது இதனைப் பற்றிய அறிவு மற்றும் ஞானத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். முழுமையான முறையில் அறிவு இல்லாவிட்டாலும் மனிதன் தனது இறைவணக்கத்தை நிறைவேற்றுவதற்கும், கட்டளைகளின்படி அமல் செய்வதற்கும் அல்லாஹ்வின் இந்த பண்புகள் பற்றிய ஞானத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் அனைத்து இறை கட்டளைகளின்படி அமல் செய்வது இறைஞானத்தைச் சார்ந்தே உள்ளது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

ஒருவர் கவனமற்ற உள்ளத்துடனும், இறைஞானம் குறித்து முற்றிலும் அறியாதவராகவும், அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் பண்புகளின் மகத்துவம் என்னவென்று தெரியாதவராகவும் இருக்கிறார் எனில், அவர் எப்போது தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுவதன் உரிமையை வழங்குவதற்கான வாய்ப்பினைப் பெறுவார்? அல்லது அவர் எவ்வாறு துஆ மற்றும் நன்மையின் பக்கம் கவனம் செலுத்த முடியும்?

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

மஃரிஃபத் அதாவது இறைஞானம் நற்செயலின் தூண்டுதலாக இருக்கிறது. நற்செயல் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மஃரிஃபத் மூலமே உருவாகிறது. எந்த அளவுக்கு அதிகமாக இறைஞானம் இருக்குமோ அந்த அளவுக்கு அதிகமாக இறை வணக்கங்கள், நற்செயல்களின் ஆன்மாவைப் புரிந்தவாறு அதை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் ஏற்படும்.

ஆக, நாம் மஃரிஃபத்தே இலாஹியின் பக்கம் கவனம் செலுத்துவோம் என்றால், இறை கட்டளைகளின்படி செயலாற்றுவதன் பக்கமும் கவனம் இருக்கும். நிச்சயமாக ஆரம்பத்தில் இந்த மஃரிஃபத் அல்லாஹ்வின் ரஹ்மானிய்யத்தின் மூலமாக, அல்லாஹ்வின் குறிப்பான வழங்குவதல் காரணமாக நல்லியல்பு கொண்டவர்களுக்கு கிடைக்கிறது. ஆனால் இந்த மஃரிஃபத், ஈமானின் அழகு மற்றும் நற்செயலாற்றுவதன் மூலம் அதிமாகிக்

கொண்டிருக்கும். மனிதன் உண்மையான இஸ்லாத்தைப் பற்றி அறியக்கூடிய அந்த இடத்தைச் சென்றடைகிறான். பெயரளவிலான இஸ்லாமாக இருப்பதில்லை. அவனது நெஞ்சமும் உள்ளமும் அல்லாஹ்வின் மஃரிஃபத்தால் பிரகாசமாகி விடுகிறது. ஆக இவைகளையே ஒரு முஸ்லிம் அல்லது உண்மையான முஸ்லிம் என்று வாதம் செய்பவர் அடைய முயற்சி செய்ய வேண்டும்.

இந்த விளக்கத்திற்குப் பிறகு நான் ஆரம்பத்தில் கூறிய விஷயத்தைப் பற்றி கூறுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு கிடைத்த இறை உதவிகள், அடையாளங்கள் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியவற்றிலிருந்து சிலவற்றை மட்டும் கூறுகிறேன். இரு நாட்களில் 23 மார்ச் வருகிறது. மேலும் ஜமாஅத்துகளில் மஸீஹ் மவ்வூது தினம் கொண்டாடப்படும். அதில் இந்த தினம் தொடர்பாக ஆலிம்கள், பேச்சாளர்கள் உரை நிகழ்த்துவார்கள். மேலும் இது தொடர்பாக பேசுவார்கள். அதில் அடையாளங்கள் பற்றியும் இருக்கும். இறை உதவி பற்றியும் பேசப்படும் அல்லது அது தொடர்பான தலைப்புகளிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை தொடர்பாகவும் பேசப்படுகின்றன.

எவ்வாறிருப்பினும், இன்றைய தலைப்பு இரு தினங்களுக்குப் பிறகு வரவிருக்கிற தினத்தை ஒத்திருப்பதும் ஒரு நல்ல யதார்த்தமாகும். இன்னொன்றையும் கூறி விடுகின்றேன். இந்த வருடம் காதியானிலிருந்து 3 நாட்களுக்கான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். மஸீஹ் மவ்வூது தினம் தொடர்பாக அரபி மொழியில் இருக்கும். மேலும் இந்த நிகழ்ச்சி M.T.A –வில் 'நேரலை' ஆக வரும். அங்கு நமது அரபி நண்பர்கள் சென்றுள்ளார்கள். அவர்கள் இந்த நாளின் முக்கியத்துவம் அல்லது இந்த விஷயங்களின் முக்கியத்துவம் பற்றி பேசுவார்கள்.

இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு சில மேற்கோள்களை எடுத்துக் கூறுகிறேன். தனது வருகை மற்றும் உண்மைத்துவம் தொடர்பாக சூரிய சந்திர கிரகணங்கள் தொடர்பாக விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

***ஸஹீஹ் தார குத்னீயில் ஒரு ஹதீஸ் உள்ளது. இமாம் முஹம்மது பாக்கர் கூறுகிறார்கள்.***

إِنَّ لِمَهْدِيِّنَا آيَتَيْنِ لَمْ تَكُوْنَا مُنْذُ خَلْقِ السَّمٰوٰتِ وَالْأَرْضِ يَنْكَسِفُ
الْقَمَرُ لِأَوَّلِ لَيْلَةٍ مِنْ رَمَضَانَ وَتَنْكَسِفُ الشَّمْسُ فِي النِّصْفِ مِنْهُ

பொருள்: நமது மஹ்திக்கு இரு அடையாளங்கள் உள்ளன. இறைவன், வானம், பூமியைப் படைத்ததிலிருந்து எவருக்காகவும் இந்த அடையாளங்கள் வெளிப்படவில்லை. அவற்றில் ஒன்று, இந்த வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் ரமலான் மாதத்தில் சந்திரனுக்கு கிரகணம் பிடிக்கும் நாட்களில் முதல் இரவிலும், அதாவது 13வது நாளன்று. மேலும் சூரிய கிரகணம் அதன் நாட்களில் நடுநாளில் ஏற்படும். அதாவது அதே ரமலான் மாதத்தின் 28வது நாள். மேலும் இப்படிப்பட்ட சம்பவம் உலகம் தொடங்கியதிலிருந்து எந்த ரஸூல் மற்றும் நபியின் காலத்திலும் வெளிப்பட்டதில்லை. வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தில் நடப்பது நியமிக்கப்பட்டதாகும். அனைத்து ஆங்கில மற்றும் உருது செய்தித்தாள்கள், அனைத்து வானவியல் நிபுணர்களும் என்னுடைய காலத்தில் அந்த சம்பவத்திற்கு ஏறக்குறைய 12 வருடங்கள் கழிந்து விட்டன. சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்பட்டதற்கு சாட்சி ஆவார்கள். எவ்வாறு இன்னொரு ஹதீஸிலில் கூறப்பட்டுள்ளது போன்று இந்த கிரகணம் இருமுறை ரமலானின் நடந்து விட்டது. முதலில் இந்த நாட்டில் மற்றொன்று, அமெரிக்காவில். மேலும் இரு முறையுமே ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்ற இந்த நாட்களிலேயே நடந்துள்ளது. இந்த கிரகணம் ஏற்பட்ட நேரத்தில் என்னைத் தவிர வேறு யாரும் வாக்களிக்கப்பட்ட மஹ்திக்கான வாதம் செய்யக்கூடியவர் இந்த பூமியில் இருக்கவில்லை. மேலும் எவரும் இந்த கிரகணத்தை என்னைப் போன்று தன்னுடைய அடையாளமாகக் குறிப்பிட்டு நூற்றுக்கணக்கான பிரசுரங்கள் மற்றும் இதழ்கள் உருது, ஃபார்ஸி மற்றும் அரபியில் வெளியிடவும் இல்லை. எனவே இந்த வானத்தின் அடையாளம் எனக்கென விதிக்கப்பட்டது. இதற்கு இரண்டாவது ஆதாரம் என்னவென்றால், இந்த அடையாளம் வெளிப்படுவதற்கு 12 வருடங்கள் முன்பாகவே இறைவன் இந்த அடையாளம் தொடர்பாக இப்படியொரு அடையாளம் வெளிப்படும் என்றும் எனக்கு அறிவித்திருந்தான். மேலும் அந்த செய்தி பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டு இந்த அடையாளம் வெளிப்படுவதற்கு முன்னரே இலட்சக்கணக்கான மக்களிடம் இந்த செய்தி பரவியிருந்தது. ஒருசில சந்திர கிரகணம் தொடர்பாக சில ஆதாரங்களை எடுத்து வைக்கிறார்கள். ஆனால் இதில் சிறப்பம்சம் என்னவென்றால், இப்படி ஒரு அடையாளம் வெளிப்படும் என்று அன்னார் முன்னரே கூறியிருந்தார்கள்.

***பிறகு இது தொடர்பாக மேலும் விளக்கம் அளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:***

இந்த ஹதீஸில் ஒரு மறைமுகமான விஷயம் அடங்கியுள்ளது. அது 1300 வருடங்களுக்கு முன் வெளிப்பட்டு விட்டது. இதன் சுருக்கம் என்னவென்றால், எப்போது வாக்களிக்கப்பட்ட மஹ்தி வருவாரோ அவருடைய காலத்தில் ரமலான் மாதத்தில் 13ம் நாள் இரவன்று சந்திர கிரகணம் ஏற்படும். மேலும் இதே மாதத்தில் 28–ம் நாள் சூரிய கிரகணம் ஏற்படும். இதுபோன்ற சம்பவம் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலத்தைத் தவிர வேறு எந்த வாதம் செய்பவரின் காலத்திலும் நடக்கவில்லை. இவ்வாறு தெளிவான மறைவான விஷயங்களைக் கூறுவது நபியைத் தவிர வேறு யாருடைய பணியும் இல்லை என்பது வெளிப்படையான ஒன்றாகும்.

***அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:***

(72:27–28) فَلَا يُظْهِرُ عَلٰى غَيْبِهٖٓ اَحَدًا اِلَّا مَنِ ارْتَضٰى مِنْ رَّسُوْلٍ

அதாவது இறைவன் தன்னுடைய தூதர்களைத் தவிர வேறு யாருக்கும் மறைவானவற்றை அறிவிப்பதில்லை. ஆக இந்த முன்னறிவிப்பு தன் பொருள் அளவில் முழுமையாக நிறைவடைந்து விட்டது. ஹதீஸ் லயீஃப் (பலவீனமானது) என்று கூறுவதும் அல்லது இது இமாம் முஹம்மது பாக்கரின் கூற்று என்று கூறுவதும் வெறும் சாக்குப் போக்கேயாகும். இவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேற வேண்டும் என்றும் அல்லது திருக்குர்ஆனின் ஏதேனும் முன்னறிவிப்பு நிறைவேற வேண்டும் எனவும் ஒருபோதும் விரும்பவில்லை. இந்த உண்மைத்துவத்திற்கான அடையாளம் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கான அடையாளமாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:***

உலகம் அழியக்கூடிய காலத்தை எட்டி விட்டது. ஆனால் அவர்களின் கூற்றுப்படி இதுவரை இறுதிக்காலம் தொடர்பான எந்த முன்னறிவிப்பும் நிறைவேறவில்லை. மேலும் இந்த ஹதீஸை விட வேறு எந்த ஹதீஸ் சரியான ஹதீஸ் ஆக இருக்க முடியும். இதை எந்தவொரு ஹதீஸ் வல்லுனரும் ஆட்சேபிக்கவில்லை. அது தன்னுடைய உண்மைத்துவத்தை, தானே நிரூபித்தது. அது வலுவானதாகும். இறை அடையாளங்களை மறுப்பதென்பது வேறு விஷயமாகும். இந்த மகத்துவமான அடையாளத்தை எனக்கு முன் ஆயிரக்கணக்கான ஆலிம்கள், மேலும் ஹதீஸ் வல்லுனர்கள் அதன் வெளிப்பாட்டை எதிர்பார்த்திருந்தார்கள். மேலும் மிம்பரில் ஏறி ஏறி அழுதழுது இதை நினைவூட்டி வந்தார்கள். ஆக, எல்லாவற்றிற்கும் இறுதியாக மவ்லவி முஹம்மது லகூக் இந்த கிரகணம் தொடர்பாக தனது புத்தகம் அஹ்வாலுல் ஆகிரத் –ல் ஒரு கவிதை எழுதுகிறார்கள். அதில் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் காலம் கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், அது ஒரு பஞ்சாபி கவிதையாகும். அதன் பொருள்: அதாவது 13ம் நூற்றாண்டில் ரமலான் மாதத்தில் சூரிய கிரகணம் ஏற்படும் என ஹதீஸில் வந்துள்ளது.

பிறகு, இன்னொரு பெரியவருடைய கவிதை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் புகழ்பெற்றது.

அதன் பொருள்: 14–ம் நூற்றாண்டில் 1311 ஹிஜ்ரியில் ஒரே மாதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் ஏற்படும் போது அந்த வாக்களிக்கப்பட்ட மஹ்தி மற்றும் தஜ்ஜாலின் வெளிப்பாட்டின் ஒரு அடையாளம் இருக்கும். இந்தக் கவிதையில் சூரிய சந்திர கிரகணங்களின் வருடம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிறகு வாதத்திற்கு முன்னரும் அன்னாரோடு இறைவனது நடைமுறை எவ்வாறிருந்தது என்பது தொடர்பாக ஒரு சம்பவம். அல்லாஹ்வின் இல்ஹாம் மூலமாக ஆறுதல் கூறியது தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:

இதுவும் ஓர் அடையாளமாகும். எப்போது எனது தந்தையார் சூரியன் மறைந்த பிறகு மரணமடைந்து விடுவார்கள் என்ற செய்தி எனக்கு வழங்கப்பட்டதோ, அப்போது மனித எதிர்பார்ப்புகளுக்கிணங்க இந்த செய்தியைக் கேட்டதும் மிகவும் வேதனை ஏற்பட்டது. ஏனென்றால் எங்களுடைய வாழ்வாதாரம் அவர்களுடைய வாழ்க்கையைச் சார்ந்தே இருந்தது. மேலும் அவர்கள் ஆங்கில அரசாங்கத்திடம் இருந்து பென்ஷன் பெற்று வந்தார்கள். மேலும் ஒரு தொகை அன்பளிப்பாகவும் பெற்று வந்தார்கள். இவை அனைத்தும் அன்னாருடைய வாழ்வோடு ஒத்திருந்தது. எனவே அன்னாரது மரணத்திற்குப் பிறகு என்ன நடக்குமோ என்ற எண்ணம் தோன்றியது. மேலும் ஒருவேளை மிகவும் கஷ்டமான காலம் வரலாம் என்ற பயம் உள்ளத்தில் ஏற்பட்டது. இந்த அனைத்து எண்ணங்களும் மின்வெட்டைப் போன்று ஒரு நொடியையும் கூட குறைவான நேரத்தில் வந்து சென்றது. அப்போது மயக்க நிலையில் இந்த இரண்டாவது இல்ஹாம் இறங்கியது.

اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ

*அல்லாஹ் தனது அடியானுக்குப் போதுமானவன் இல்லையா? (39:37)*

இந்த இறை இல்ஹாமோடு உள்ளம், ஒரு வேதனைமிக்க காயம் ஏதேனும் களிம்பு போட்டு குணமடைவதைப் போன்று (உள்ளம்) வலுவடைந்தது. உண்மையில் இந்த விஷயம் பலமுறை சோதித்துப் பார்க்கப்பட்டதாகும். அதாவது இறை வஹியில் உள்ளத்திற்கு ஆறுதல் வழங்குவதற்காக ஒரு சிறப்புத்தன்மை உள்ளது. அந்த சிறப்புத்தன்மையின் வேர் இறை வஹியின் மீது ஏற்படும் நம்பிக்கையாகும். அந்தோ பரிதாபம்! எப்படிப்பட்ட ஓர் இல்ஹாம். இந்த இல்ஹாமின் வாதத்திற்குப் பிறகும் இந்த நமது இல்ஹாம் கற்பனைகளாகும். இது ஷய்த்தானிய அல்லது ரஹ்மானிய இல்ஹாமா? என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட இல்ஹாம்களின் தீங்கு அதன் நன்மையை விட அதிகமாகும் என்கின்றனர்.

ஆனால் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். எவ்வாறு திருக்குர்ஆனின் மீதும் இறைவனின் மற்ற வேதங்கள் மீதும் நம்பிக்கை கொள்கிறேனோ அவ்வாறு இந்த இல்ஹாம்களின் மீது நம்பிக்கை கொள்கிறேன். மேலும் எவ்வாறு திருக்குர்ஆனை முழுமையான முறையில் இறை வார்த்தை என நம்புகிறேனோ அவ்வாறு என் மீது இறங்கும் இந்த வார்த்தைகளையும் இறை வார்த்தைகளாகவே நம்புகிறேன். ஏனென்றால் அதனுடன் ஒரு இறை பிரகாசத்தையும் ஒளியையும் காண்கின்றேன். மேலும் அத்தோடு இறை வல்லமையின் முன்மாதிரியைக் காண்கின்றேன்.

اَلَيْسَ اللّٰهُ بِكَافٍ عَبْدَهٗ

என்று எனக்கு இல்ஹாம் இறங்கிய போது இறைவன் என்னை வீணாக்கமாட்டான் என்று புரிந்து கொண்டேன். அப்போது நான் மலாவமல் என்றவொரு இந்துவிடம் அவர் காதியானில் வசிக்கக்கூடியவர். மேலும் இப்போது வரை உயிரோடிருக்கிறார். அந்த இல்ஹாமை எழுதிக் கொடுத்து அனைத்து சம்பவத்தையும் அவருக்கு கூறினேன். அவரை அமிர்தசரஸில் ஹக்கீம் மவ்லவி முஹம்மது ஷரீஃப் கலாநூரி மூலமாக அதை ஏதேனும் ஒரு கல்லில் எழுதி மேலும் முத்திரை செய்து கொண்டு வருமாறு அனுப்பினேன். மேலும் இந்த இந்துவை அவர் இந்த மகத்தான முன்னறிவிப்பிற்கு சாட்சியாக ஆக வேண்டும் என்பதற்காக மட்டுமே இந்த பணிக்காக தேர்ந்தெடுத்தேன். மேலும் மவ்லவி முஹம்மது ஷரீஃபும் சாட்சியாக வேண்டும் என்பதற்காகவும் ஆகும். ஆக மவ்லவி சாஹிப் மூலமாக அந்த மோதிரம் 5 ரூபாய்க்கு தயாராகி என்னை வந்தடைந்தது. அது இப்போது வரை என்னிடம் உள்ளது. இந்த இல்ஹாம் எங்களது அனைத்து வாழ்வாதாரம், நிம்மதி அனைத்தும் எங்களுடைய தந்தையின் குறைந்த வருமானத்தோடு சார்ந்திருந்த போது வந்ததாகும். மேலும் வெளியில் உள்ளவர்களில் ஒருவர் கூட என்னை அறியாதிருந்தார்கள். மேலும் நான் ஓர் அடையாளமில்லா மனிதனாக இருந்தேன். மேலும் காதியான் போன்ற கிராமத்தில் யாரும் அறியாத ஓர் மூலையில் கிடந்தேன். பிறகு இறைவன் தன்னுடைய முன்னறிவிப்பிற்கேற்ப ஓர் உலகத்தை என் பக்கம் திருப்பினான். மேலும் இதுபோன்ற தொடர் வெற்றியினால் பொருளாதார உதவி செய்தான். அதற்கு நன்றி கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. எனது நிலையை எண்ணி மாதம் 10 ரூபாய் வரும் என்ற நம்பிக்கை கூட இருக்கவில்லை. ஆனால் ஏழைகளை மண்ணிலிருந்து தூக்கி, மேலும் அகங்காரம் கொண்டவர்களை மண்ணோடு மண்ணாக்கும் இறைவன் எப்படிப்பட்ட உதவியை செய்தான் என்றால், என்னால் நிச்சயமாக கூற இயலும். இதுவரை ஏறக்குறைய 3 இலட்சம் ரூபாய் வந்துள்ளது. ஒருவேளை இதை விட அதிகமாகக் கூட இருக்கலாம். அந்த வருமானத்தில் லங்கர்கானாவிற்காக ஒவ்வொரு மாதமும் 1500 ரூபாய் செலவாகிறது. மேலும் மற்ற கிளைகள் அதாவது மத்ரஸா, புத்தகங்கள் அச்சிடுவது போன்றவை தனியாகும். ஆக, இந்த முன்னறிவிப்பு அதாவது, அலைஸல்லாஹு பி காஃபின் அப்தஹூ எந்த அளவு சப்தமாக மகத்துவத்துடன் முழுமை அடைந்துள்ளது என்று பார்க்க வேண்டும்.

இது ஏதேனும் பொய்யருடைய வேலையா? அல்லது ஷய்த்தானிய குழப்பங்களா? ஒருபோதும் இல்லை. மாறாக இது எவனுடைய கைகளில் கண்ணியமும் இழிவும், வாழ்வும் தாழ்வும் இருக்கின்றனவோ அந்த இறைவனின் பணியாகும். எனது இந்தக் கூற்றில் நம்பிக்கை இல்லை என்றால் 20 வருட ரிஜிஸ்டர் தபால்களைப் பாருங்கள். அதன் மூலம் எந்த அளவு வருமானத்திற்கான வாசல்கள் திறக்கப்பட்டுள்ளன என்பது தெரிய வரும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த லங்கர் முழு உலகிலும் செயல்பட்டு வருகிறது. இங்கும் செயல்பட்டு வருகிறது. மேலும் கிலாஃபத்தின் காரணமாக இங்கு நிலையான அடித்தளத்தில் நிலைபெற்று விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பண்பில் இது ஒரு முக்கியமான கிளையாகும். எனவே இங்கு லங்கரின் பொறுப்பாளர்கள், விருந்து உபசரிப்பின் பொறுப்பாளர்களும் வரக்கூடிய ஒவ்வொரு விருந்தாளிகளின் பக்கம் கவனம் செலுத்துங்கள். நிச்சயமாக வீண் விரயம் ஆகுமானதல்ல. விருந்து உபசரிப்பு திட்டமிட்டே இருக்க வேண்டும். ஆனால் எங்கேயும் கஞ்சத்தனம் தெரியக்கூடாது. ஏனென்றால் இந்த லங்கர் உங்களுடையதல்ல. மாறாக செயல்பட்டுக் கொண்டிருப்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் லங்கர் ஆகும். சில சமயம் விருந்து உபசரிப்பு குழு அல்லது பொறுப்பாளர் தொடர்பாக புகார்களும் வந்து விடுகின்றன.

எனவே அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். உலகத்தில் எல்லா இடங்களிலும் குறிப்பாக இங்கும், இதுபோன்று ரப்வாவிலும், காதியானிலும் உள்ளன. பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக தனது ஓர் இல்ஹாமை கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக முன்னறிவிப்பு உள்ளது.

كَزَرْعٍ أَخْرَجَ شَطْأَهُ فَاسْتَغْلَظَ فَاسْتَوٰى عَلٰى سُوْقِهٖ۔

அதாவது முதலில் ஒரு விதை இருக்கும். பிறகு அது துளிர் விடும். பிறகு பெரிதாகும். பிறகு தன் கிளைகளில் நிலைபெறும்.

இது ஒரு பெரிய முன்னறிவிப்பாகும். இந்த ஜமாஅத் உருவாவதற்கு முன்னரே அதன் வளர்ச்சி பற்றி இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்னரே செய்யப்பட்டது. அப்போது ஜமாஅத்தும் இருக்கவில்லை. மேலும் என்னோடு எவருக்கும் பைஅத் தொடர்பும் இருக்கவில்லை. மாறாக அவர்களில் எவரும் என் பெயரைக் கூட அறியாதிருந்தனர். பிறகு இறைவனின் அருள் ஒரு ஜமாஅத்தை உருவாக்கி விட்டது. அது இப்போது 3 இலட்சத்தையும் விட சற்று அதிகமாகும். (இது அன்னார் கூறிய நேரத்தில்) நான் இறைவனின் கையால் விதைக்கப்பட்ட ஒரு சிறிய விதையைப் போன்று இருந்தேன். பிறகு ஒரு காலம் வரை மறைவாக இருந்தேன். பிறகு நான் வெளிப்பட்டேன். மேலும் பல்வேறு கிளைகள் என்னோடு தொடர்பு கொண்டன.

ஆக, இந்த முன்னறிவிப்பு முழுக்க முழுக்க இறைவனின் கைகளினால் பூர்த்தியானது. இன்று நாம் பார்க்கிறோம். அல்லாஹ்வின் அருளால் உலகின் 204 நாடுகளில் ஜமாஅத் நிலைபெற்று விட்டது. மேலும் அல்லாஹ்வின் அருளால் கோடிக்கணக்கான எண்ணிக்கையில் உள்ளனர். M.T.A மூலமாக உலகின் எல்லா மூலைகளிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியும் சென்று கொண்டிருக்கின்றது.

பிறகு அன்னார் இன்னோரிடத்தில் ஓர் அடையாளம் பற்றி கூறுகின்றார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பு உள்ளது.

يَعْصِمُكَ اللّٰهُ وَاِنْ لَّمْ يَعْصِمْكَ النَّاسُ۔ وَاِنْ لَّمْ يَعْصِمْكَ النَّاسُ

அதாவது இறைவன் தானே உன்னை அனைத்து இன்னல்களில் இருந்து காப்பாற்றுவான். மக்கள் நீ இன்னல்களிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று விரும்பா விட்டாலும் சரியே. இது நான் யாரும் அறியாத மூலையில் மறைந்திருந்த சமயத்தின் முன்னறிவிப்பாகும். மேலும் யாருக்கும் என்னோடு பைஅத் தொடர்பும் இருக்கவில்லை. மேலும் எதிர்ப்பும் இருந்ததில்லை. ஏதேனும் எதிர்ப்பு இருக்கின்ற பட்சத்தில் தான் காப்பாற்றக்கூடிய கேள்வி எழும். யாருமே அன்னாரை அறிந்திருக்கவே இல்லை. பிறகு எதிர்ப்பு எங்கிருந்து வரும்?

### *ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:*

எப்போது நான் மஸீஹ் மற்றும் மஹ்திக்கான வாதம் செய்தேனோ அப்போது அனைத்து மவ்லவிகள் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் நெருப்பைப் போன்று ஆகிவிட்டார்கள். அந்த நாட்களில் டாக்டர் மார்டின் கிளார்க் என்ற பாதிரியார் என் மீது கொலை வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கில் பஞ்சாபின் மவ்லவிகள் என் இரத்தத்தின் மீது தாகம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். மேலும் என்னை, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் எதிரியாகவும், அன்னாரை ஏசிப்பேசக்கூடிய ஒருவனை விடவும் மோசமானவனாகவும் கருதுகிறார்கள். ஏனென்றால் ஒருசில மவ்லவிகள் இந்த வழக்கில் எனக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆஜராகி இந்த பாதிரியாரின் சாட்சியாக சாட்சி அளித்தார்கள். மேலும் ஒருசிலர் பாதிரிகள் வெற்றி பெற வேண்டும் என்ற துஆவில் மூழ்கி இருந்தார்கள். நான் நம்பத்தகுந்தவரின் மூலம் கேட்டேன். அவர்கள் பள்ளிவாசலில் அழுதழுது இறைவா இந்த பாதிரியாருக்கு உதவி செய். அவருக்கு வெற்றியை வழங்கு என்று துஆ செய்துள்ளார்கள். ஆனால் எல்லாம் அறியக்கூடிய அந்த இறைவன் அவை அனைத்தையும் கேட்கவில்லை. சாட்சி அளிக்கக்கூடியவர் தங்களது சாட்சியங்களில் வெற்றி பெறவில்லை. மேலும் துஆ செய்யக்கூடியவர்களின் துஆவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இவர்கள் தான் மார்க்கத்திற்கு உதவி செய்பவர்கள். இவர்கள் எனக்கு தூக்குத் தண்டனை வாங்கித் தருவதற்கு தங்களது அனைத்து திட்டங்களையும் மேற்கொண்டார்கள். மேலும் இறைவன் மற்றும் இறைவனின் நபியின் எதிரிக்கு உதவினார்கள். இந்த சமுதாயத்தின் அனைத்து மவ்லவிகளும் மேலும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் எனக்கு கொடிய எதிரிகளாகி விட்டனர். பிறகு அந்த கொளுந்து விட்டெரியும் நெருப்பிலிருந்து யார் என்னை காப்பாற்றினார் என்ற எண்ணம் இயல்பாக உள்ளத்தில் எழும். என்னை கொலையாளி ஆக்குவதற்கு 8, 9 சாட்சிகள் முடிந்து விட்டன. அதற்கு பதில் இதுவாகும். அவன் 25 வருடங்கள் முன்பு உன்னுடைய சமுதாயம் உன்னை காப்பாற்றாது. மேலும் நீ

அழிய வேண்டும் என முயற்சி செய்யும். ஆனால் நான் உன்னை காப்பாற்றுவேன் என்று கூறிய அந்த இறைவன் தான் காப்பாற்றினான்.

இது பராஹீனே அஹ்மதிய்யாவில் இன்றிலிருந்து 25 வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்டுள்ளது. அது இதுவாகும்:

فَبَرَّأَهُ اللَّهُ مِمَّا قَالُوا وَكَانَ عِندَ اللَّهِ وَجِيهًا

அதாவது இறைவன் அவர் மீது போடப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து அவரை விடுவித்தான். மேலும் இறைவன் பார்வையில் அவர் தூயவர் ஆவார்.

இன்று பாருங்கள்! இந்த இல்ஹாம் இன்றும் எந்த அளவு மகத்துவத்துடன் பூர்த்தி அடைந்துள்ளது என்றால், டாக்டர் மார்ட்டின் கிளார்க்கின் கொள்ளுப் பேரன் நம்முன் என்னுடைய பூட்டனார் தவறானவராக இருந்தார். மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி உண்மையாளர் என்று ஏற்றுக் கொள்கிறார். ஜல்ஸாவில் வெளிப்படையாக அவர் ஒப்புக் கொண்டார். இது பதிவாகியும் உள்ளது.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இன்னொரு அடையாளம் தொடர்பாக கூறுகின்றார்கள்:***

மவ்லவி குலாம் ரஸூல் தஸ்தகீரி தனது இதழ் ஃபத்ஹே ரஹ்மானியில் 1315 ஹிஜ்ரியில் எனக்கு எதிராக அஹ்மதி அச்சகம் லூதியானாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதில் முபாஹலா வடிவில் ஒரு சாபம் விட்டிருந்தார். அது மேற்கூறப்பட்ட இதழில் 26, 27 பக்கங்களில் இந்த சாபம் இருந்தது. அல்லாஹும்ம யாஸல் ஜலாலி வல் இக்ராம். யா மாலிக முல்க். எவ்வாறு நீ ஒரு ஆலிம் ஹஸ்ரத் முஹம்மது தாஹிர் ஆசிரியர் மஜ்மஃ பிஹாருல் அன்வார் உடைய துஆ மற்றும் முயற்சியால் அவர்கள் காலத்தில் தோன்றிய பொய் மஸீஹை அழித்தாயோ அதுபோன்ற துஆவையே உண்மையான உள்ளத்தோடு உன்னுடைய மார்க்கத்திற்கு முடிந்த வரை முயற்சி செய்யும் இந்த ஃபக்கீர் கஸூரியும் செய்கிறேன். நீ மிர்ஸா காதியானி மற்றும் அவரின் கூட்டங்களை பாவமன்னிப்புக் கோரி திரும்ப வாய்ப்பளிப்பாயாக! இது விதிக்கப்படவில்லையெனில் இந்த இறை வசனத்திற்கேற்ப அவர்களை ஆக்குவாயாக!

فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِينَ ظَلَمُوا (6:46)

பொருள்: எவர்கள் அநீதியிழைக்கக் கூடியவர்களோ அவர்கள் வேரோடு அறுக்கப்படுவார்கள். அல்லாஹ்வே புகழுக்குரியவனாவான். அவன் அனைத்தின் மீதும் வல்லமையுள்ளவன் ஆவான். மேலும் துஆ ஏற்றுக் கொள்ளக்கூடியவனாவான்.

பிறகு குறிப்பிடப்பட்ட புத்தகத்தின் 26 –ம் பக்கத்தின் அடிக்குறிப்பில் மேற்கூறப்பட்ட மவ்லவி என்னைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார். அதாவது அவர் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்கள் அழிந்து விட வேண்டும்.

ஆக இறைவனின் அருளால் நான் இதுவரை உயிரோடுள்ளேன். மேலும் என்னைப் பின்பற்றுபவர்கள் அந்தக் காலத்தை விட ஏறக்குறைய 6 மடங்கு அதிகமாகும். (இப்போது அல்லாஹ்வின் அருளால் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் அதை விட அதிகமாக எண்ணிக்கையில் உள்ளனர்)

ஆக, வெளிப்படையான விஷயம் என்னவென்றால், மவ்லவி குலாம் தஸ்தகீர் என் உண்மை மற்றும் பொய்யின் தீர்ப்பு, (6:46) فَقُطِعَ دَابِرُ الْقَوْمِ الَّذِينَ ظَلَمُوا இறைவசனத்தின்படி இருக்க வேண்டும் என விரும்பினார். இங்கு இதன் பொருள்: எவர் அநீதியிழைப்பாரோ அவரின் வேர் வெட்டப்படும். எவர் அநீதியிழைப்பவராக இருப்பாரோ அவர் மீது அதன் விளைவு ஏற்படும். இந்த வசனத்தின் பொருள் பொதுவானதாகும் என்பது அறிவுள்ள அனைவருக்கும் தெரியும்.

ஆக, குலாம் தஸ்தகீர் இறைவனின் பார்வையில் அநீதியிழைப்பவராக இருந்தார். எனவே அவர் எழுதிய புத்தகம் வெளியிடுவதை காணக்கூடிய அளவுக்குக் கூட காலக்கெடு வழங்கப்படவில்லை. அதற்கு முன்பே இறந்து விட்டார். அவர் அந்த துஆ செய்ததிலிருந்து ஒரு சில தினங்களிலேயே இறந்தது அனைவருக்கும் தெரியும்.

மவ்லவி குலாம் தஸ்தகீர் முபாஹலா செய்யவில்லை என்று ஒரு சில அறிவற்ற மவ்லவிகள் எழுதுகின்றனர். அநீதியிழைப்பவர் மீது சாபம் மட்டும் தான் விட்டார் என்று கூறுகின்றனர். நான் கூறுகிறேன். அவர் நான் இறக்க வேண்டும் என இறைவனிடம் தீர்ப்பு வேண்டினார். மேலும் என்னை அநீதியிழைக்கக் கூடியவனாக ஆக்கினார். பிறகு அந்த சாபம் அவரின் மீதே ஏன் விழுந்தது? மக்கள் இறை தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இக்கட்டான தருணத்தில் குலாம் தஸ்தகீரையே ஏன் அழித்து விட்டான்? அவர் தனது துஆவில் நான் அழிய வேண்டும் என்று விரும்பினார். எவ்வாறு முஹம்மது தாஹிரின் சாபத்தின் மூலம் பொய் மஹ்தி மற்றும் பொய் மஸீஹ் அழிந்து விட்டார்.

மேலும் எனது சாபத்தால் இந்த மனிதன் அழிந்து விட்டார் என்று உலகிற்கு நிரூபிக்க ஆசைப்பட்டார். பிறகு துஆவிற்கு எதிர்மறையான விளைவு ஏன் ஏற்பட்டது? முஹம்மது தாஹிரின் துஆவினால் பொய் மஹ்தி அழிந்தார் என்பது உண்மையாகும். மேலும் அதே முஹம்மது தாஹிரைப் போன்று குலாம் தஹ்தகீர் என் மீது சாபம் செய்தார். இப்போது தாஹிரின் சாபத்திற்கு என்ன விளைவு ஏற்பட்டது? மேலும் குலாம் தஸ்தகீரின் துஆவிற்கு என்ன விளைவு ஏற்பட்டது என்று சிந்திக்க வேண்டும். குலாம் தஸ்தகீர் யதார்த்தமாகவே இறந்தார் என்றால் பிறகு முஹம்மது தாஹிரின் சிறப்பு ஒன்றுமில்லை. ஏனென்றால் பிறகு அந்த பொய் மஹ்தியும் யதார்த்தமாகவே இறந்தான் என்று கூறி விடலாம்.

لَعْنَتَ اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ

குலாம் தஸ்தகீர் இறந்து இப்போது 11 வருடங்கள் கழிந்து விட்டன. எவன் அநீதியிழைக்கக் கூடியவனாக இருந்தானோ இறைவன் அவனுடைய வீட்டை பாழடையச் செய்து விட்டான். இப்போது எவருடைய வேர் அறுக்கப்பட்டது என்று நீதியுடன் கூறுங்கள். மேலும் யார் மீது இந்த துஆ விழுந்தது? அல்லாஹ் கூறுகிறான்:

(9:98) وَيَتَرَبَّصُ بِكُمُ الدَّوَآئِرَ عَلَيْهِمْ دَآئِرَةُ السَّوْءِ

அதாவது நபியே! தீய எண்ணம் கொண்ட எதிரிகள் உன் மீது பல்வேறு இன்னல்களை விரும்புகின்றனர். அவர்களின் மீதே அவை அனைத்தும் விழும்.

ஆக, இந்த வசனத்தின் மூலம், எவர், ஓர் உண்மையாளர் மீது சாபம் விடுவாரோ அதே சாபம் அவரின் மீது விழும் என்பது இறைவனின் நடைமுறையாகும். இது திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிலிருந்தும் வெளிப்படையான ஒன்றாகும். இந்த துஆவிற்குப் பின் குலாம் தஸ்தகீர் இறந்து விட்டாரா? இல்லையா? என்று கூறுங்கள். எனவே முஹம்மது தாஹிர் சாபம் விட்ட பொய் மஹ்தி இறந்து விட்டான். ஆனால் என் மீது சாபம் விட்டவனே இறந்து விட்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது? இறைவன் எனது வயதை அதிகரித்து விட்டான். நான் 11 வருடங்களாக உயிருடன் இருக்கிறேன். குலாம் தஸ்தகீருக்கு ஒரு மாத காலக்கெடு கூட கிடைக்கவில்லை.

***பிறகு மொழிப்புலமை தொடர்பாக அன்னார் கூறுகின்றார்கள்:***

பராஹீனே அஹ்மதிய்யாவில் இந்த முன்னறிவிப்பு உள்ளது. உமக்கு அரபி மொழியில் புலமை வழங்கப்படும். அதோடு யாராலும் போட்டியிட முடியாது. இதுவரை எவராலும் போட்டியிட முடியவில்லை. இதுதொடர்பாக இறைவன் புறமிருந்து இல்ஹாம் வந்தது.

كلام أفصحت من لدن رب كريم

இதுவரை நான் அரபியில் இயற்றிய புத்தகங்களில் சில கட்டுரை வடிவிலும் சில கவிதை வடிவிலும் உள்ளன. அதே போன்ற ஒன்றை எதிரி ஆலிம்களால் கொண்டு வர முடியவில்லை. அதன் விபரம் இதுவாகும். அஞ்சாமே ஆத்தமின் 73–282 வரை அரபியில் உள்ளது. ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் –வோடு இணைந்தவாறு அத்தப்லீக், கராமாத்துஸ் ஸாதிகீன், ஹமாமத்துல் புஷ்ரா, சீரத்துல் அப்தால், நூருல் ஹக் பக்கம் 1, நூருல் ஹக் பாகம் 2, துஹ்ஃபாயே பக்தாத், இஜாஸுல் மஸீஹ், அத்மாமுல் ஹுஜ்ஜ, ஹுஜ்ஜத்துல்லாஹ், ஸிர்குல் குலாஃபா, மவாயிபுர்ரஹ்மான், இஜாஸே அஹ்மதி, குத்பா இல்ஹாமியா, அல் ஹுதா, தஸ்கிரத்துஷ் ஷஹாதத்தைன் உடன் இலாமாத்துல் முகர்ரிபீன், மேலும் அரபியில் எழுதப்பட்டு இதுவரை வெளிவராத புத்தகங்கள் அவை தர்கீபுல் மூஃமினீன், ஹுஜ்ஜத் நூர், நஜ்முல் ஹுதா இது அப்போதைய விஷயமாகும். அல்லாஹ் எனக்கு கூறியுள்ளான் என்று முன்னறிவிப்பு செய்தார்கள். பிறகு இந்தப் புத்தகங்களும் எழுதினார்கள். அரபிகளும் கூட இந்த புத்தகங்களின் புலமையை ஏற்றுக் கொள்கின்றனர். நான் கூறியது போன்று இன்றைய காலத்திலும் ஏற்றுக் கொண்டதற்கு ஒரு சில குத்பாக்கள் முன்னரும் பல ஆதாரங்களைக் கூறியுள்ளேன்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

ஓர் இந்து காதியானில் என்னிடம் வந்து அவருடைய பெயர் நினைவில் இருக்கவில்லை. அவர், நான் ஒரு மார்க்க மாநாடு நடத்த விரும்புகிறேன். அந்த மாநாட்டில் படிப்பதற்காக தாங்களும் உங்களுடைய மார்க்கத்தின் சிறப்புகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுங்கள். நான் முதலில் மறுத்தேன். ஆனால் அவர் நீங்கள் கண்டிப்பாக எழுத வேண்டும் எனக் கெஞ்சியவாறு மீண்டும் மீண்டும் கூறினார். நான் எனது சக்தியால் ஒன்றும் செய்ய இயலாது என்பதை நான் நன்கறிவேன். மாறாக என்னில் எந்த சக்தியும் இறைவன் பேச வைக்காமல் என்னால் பேச இயலாது. எனவே எனக்கு இந்த கூட்டத்தில் அனைத்து கட்டுரைகளை விடவும் மேலோங்கும் ஒரு கட்டுரையை போடும்படி நான் துஆ செய்தேன். துஆவிற்குப் பிறகு பார்த்தேன். ஒரு ஆற்றல் என்னுள் ஊதப்பட்டு நான் அந்த வானத்தின்

ஆற்றல்களின் ஓர் அசைவை என்னுள் உணர்ந்தேன். மேலும் அப்போது என்னுடன் இருந்த நண்பர்கள் அறிவார்கள். நான் அதற்காக குறிப்புகள் எதுவும் எழுதவில்லை. மேலும் பேனாவில் வந்ததை அப்படியே எழுதினேன். நான் எந்த அளவுக்கு வேகமாக எழுதினேன் என்றால் அதைப் பார்த்து எழுதக் கூடியவர்களுக்கு அதற்கு ஈடு கொடுத்து விரைவாக எழுதுவது மிகவும் கஷ்டமாக இருந்தது. எப்போது நான் கட்டுரையை முடித்தேனோ அப்போது இறைவனிடம் இருந்து இல்ஹாம் வந்தது.

مضمون بالا رہا *அதாவது, கட்டுரை உயர்ந்ததாக இருந்தது.*

சுருக்கம் என்னவென்றால், எப்போது இந்தக் கட்டுரை அக்கூட்டத்தில் படிக்கப்பட்டதோ அது கேட்பவர்களுக்கு ஒரு தூய உலகமாக இருந்தது. ஒவ்வொருவரின் பக்கம் இருந்தும் புகழின் குரல் எழுந்தது. எதுவரையென்றால், இந்த கூட்டத்தின் தலைவராக இருந்த ஒரு இந்து சகோதரரும் தன்னை அறியாமலேயே அவருடைய வாயிலிருந்து இந்த கட்டுரை மற்ற கட்டுரைகளை விட உயர்ந்ததாக இருந்தது என்று வந்தது. மேலும் லாஹூரிலிருந்து வெளிவரும் ஆங்கில செய்தித்தாள் Civil and Military Gazette –ம் இந்த கட்டுரை உயர்ந்ததாக இருந்தது என சான்று பகர்ந்தது. ஏறக்குறைய 20 உருது செய்தித்தாள்களும் இதே சான்றை வழங்கியிருக்கும். கூட்டத்தில் ஒரு சில வெறுப்பு கொண்டவர்களைத் தவிர அனைவரின் நாவிலும் இந்த கட்டுரையே வெற்றி பெற்றது என்ற வார்த்தைகளே இருந்தன. இன்று வரை இதே சான்று பகர்கின்ற நூற்றுக்கணக்கான மக்கள் உள்ளனர்.

ஆக ஒவ்வொரு பிரிவினரின் சான்றுகளும், ஆங்கில செய்தித்தாள்களின் சான்றுகள் மூலமும் கட்டுரை உயர்வாக இருந்தது என்ற எனது முன்னறிவிப்பு பூர்த்தி அடைந்தது. இந்த போட்டி மூஸா நபிக்கு மந்திரவாதிகளோடு செய்த போட்டியைப் போன்றதாக இருந்தது. ஏனென்றால் பல்வேறு கருத்துகள் கொண்ட மக்கள் தத்தமது மார்க்கங்கள் தொடர்பாக உரை நிகழ்த்தினார்கள். இதில் சில கிறித்தவர்கள் இருந்தார்கள். சில பழைய மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். மேலும் சில ஆரிய சமூகத்தின் இந்துக்களும் இருந்தனர். பிரம்மர்களும், சில சீக்கியர்களும் சில நமது எதிரி முஸ்லிம்களும் இருந்தனர். அனைரும் தத்தமது தடியின் கற்பனையான பாம்பை வைத்திருந்தார்கள். ஆனால் இறைவன் என் கையினால் அந்த இஸ்லாத்தின் ஒரு தூய மற்றும் ஞானங்கள் நிறைந்த உரையின் மூலம் அவர்களுக்கு ஓர் தடியை விட்ட போது அது பெரிய பாம்பாகி உருவெடுத்து அனைத்தையும் விழுங்கி விட்டது. மேலும் இன்று வரை எனது வாயிலிருந்து வந்த இந்த உரையைப் பற்றி புகழுடன் கூடிய சர்ச்சை சமூகத்தில் உள்ளது.

فَالْحَمْدُ لِلّٰهِ عَلٰى ذٰلِكَ

அந்தக் காலத்தில் மட்டுமல்ல. இன்றும் அதை படிப்பவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். எனவே நான் இந்த புத்தகத்தை பிரபல்யப்படுத்துங்கள் என்று கூறி வருகிறேன். லிட்டரேச்சரோடு கொடுக்க வேண்டும். மற்றவர்களும் கடிதம் எழுதும் போது இந்தப் புத்தகத்தை படித்ததன் மூலமாக இஸ்லாத்தின் அழகு தெரிய வந்தது என்று எழுதுகிறார்கள். பல புதிதாக பைஅத் செய்தவர்களிடம் உங்களை எது அதிக தாக்கத்திற்குள்ளாக்கியது என்று கேட்கும் போது பலரும் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் புத்தகமே எம்மை தாக்கத்திற்குள்ளாக்கியது என்ற பதிலை கொடுக்கின்றனர். அதன் மூலமே இஸ்லாத்தின் பக்கமும், அஹ்மதிய்யத்தின் பக்கமும் கவனம் ஏற்பட்டது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இந்த முன்னறிவிப்பு தூய்மை மற்றும் அசுத்தத்திற்கிடையில் வேறுபாடு ஏற்படுத்தாதவரை நான் உன்னை விட மாட்டேன் என்பதை எப்போது வெளிப்படுத்தினான் என்றால் நீங்கள் பார்க்கிறீர்கள். உங்களுடைய கடினமான எதிர்ப்பு, எதிர்ப்பான துஆக்கள் செய்தும் அவன் என்னை விடவில்லை. ஒவ்வொரு மைதானத்திலும் அவன் எனக்கு உதவியாளனாக இருந்தான். என் மீது வீசப்பட்ட ஒவ்வொரு கல்லையும் அவன் தன் கைகளில் வாங்கிக் கொண்டான். மேலும் என் மீது எய்தப்பட்ட ஒவ்வொரு அம்பையும் எதிரிகளின் பக்கம் திருப்பி விட்டான். நான் இயலாதவனாக இருந்தேன். அவன் எனக்கு அடைக்கலம் வழங்கினான். நான் தனிமையாக இருந்தேன். அவன் என்னை தன்னுடைய அரவணைப்பில் எடுத்துக் கொண்டான். நான் ஒன்றுமற்றவனாக இருந்தேன். அவன் எனக்கு கண்ணியத்தோடு புகழையும் வழங்கினான். மேலும் இலட்சக்கணக்கான மக்களை என்னை ஏற்றுக் கொண்டவர்களாக ஆக்கி விட்டான்.

பிறகு அதே புனித வஹியில் கூறுகிறான்: எப்போது என்னுடைய உதவி உன்னை வந்தடையுமோ என் வாயின் வார்த்தைகள் பூர்த்தியாகி விடும். அதாவது படைப்புகள் திரும்பும். மேலும் பொருளாதார உதவிகள் வெளிப்படும். அப்போது நிராகரிப்பவர்களிடம் கூறப்படும். பாருங்கள்! எது தொடர்பாக நீங்கள் அவசரப்பட்டீர்களோ அந்த

விஷயங்கள் பூர்த்தியாகவில்லையா? இன்று அந்த அனைத்து விஷயங்களும் பூர்த்தியாகி விட்டன. இதைக் கூற வேண்டும் என்ற தேவை இல்லை. இறைவன் தனது வாக்குறுதியை நினைவில் கொண்டு இலட்சக்கணக்கான மக்களை என் பக்கம் திரும்ப வைத்தான். எவரது கனவில் கூட வராத அளவுக்கு பொருளாதார உதவி செய்தான்.

எனவே, எதிரிகளே! இறைவன் உங்கள் மீது கருணை காட்டுவானாக! உங்களது கண்களைத் திறப்பானாக! இது மனிதனின் சூழ்ச்சியாக இருக்க முடியுமா என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். இந்த வாக்குறுதிகள் பராஹீனே அஹ்மதிய்யா எழுதும் போது செய்யப்பட்டவை ஆகும். அப்போது சமுதாயத்தின் முன் அதை கூறுவது நகைப்பிற்குரிய ஒரு விஷயமாக இருந்தது. மேலும் என்னைப் பற்றிய அறிமுகம் ஒரு தானியத்திற்குரிய எடை அளவு கூட இருக்கவில்லை. இந்தக் கூற்றில் உங்களில் எவரால் என்னைக் குற்றவாளியாக ஆக்க இயலும்? உங்களில் எவராவது அப்போதும் இந்த ஆயிரக்கணக்கான மக்களில் யாரேனும் என்னைப் பின்பற்றுபவராக இருந்தார் என்று நிரூபித்துக் காட்ட இயலுமா? நான் பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடப்படும் போது எந்த அளவு மக்கள் அறியாதவனாக இருந்தேன் என்றால், அமிர்தசரஸில் ஒரு பாதிரியாரின் அச்சகத்தில் அவருடைய பெயர் ரஜப் அலி ஆகும். எனது புத்தகம் பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது. நான் அதன் Proof பார்ப்பதற்காக மேலும் புத்தகத்தை அச்சிடுவதற்காக தனியாக அமிர்தசரஸ் செல்வேன். மேலும் தனியாகவே திரும்பி வருவேன். வரும் போதும் போகும் போதும் நீ யாரென்று கூட யாரும் கேட்கமாட்டார்கள். யாருக்கும் என்னைப் பற்றிய அறிமுகமும் கிடையாது. மேலும் எனக்கு அப்படியொரு தகுதியும் இருக்கவில்லை. என்னுடைய நிலைக்கு காதியானின் ஆரியர்களும் சாட்சியாவார்கள். அதில் ஷரம்பத் என்ற நபர் இதுவரை காதியானில் இருக்கிறார். சில சமயம் என்னோடு அமிர்தசரஸில் பாதிரி ரஜப் அலியின் அச்சகத்திற்கு செல்வார். அவருடைய அச்சகத்தில் எனது புத்தகம் பராஹீனே அஹ்மதிய்யா அச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் இந்த அனைத்து முன்னறிவிப்புகளையும் எழுதுபவர் எழுதி வந்தார். பாதிரியார் மிகவும் வியப்புடன் அந்த முன்னறிவிப்புகளைப் படித்துப் பேசி வந்தார். ஒரு சாதாரண மனிதனின் பக்கம் ஒரு உலகம் எவ்வாறு திரும்பும் என வியப்புடன் கேட்டார். அந்த விஷயங்கள் இறைவன் புறமிருந்து இருந்தது. என் தரப்பிலிருந்து இருக்கவில்லை. எனவே அவை தனது நேரத்தில் பூர்த்தியாகின. மேலும் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. ஒரு நேரத்தில் மனிதர்களுக்கு வியப்பாக இருந்தது. இன்னொரு நேரத்தில் அதை பார்த்தும் விட்டனர்.

இப்போதும் அல்லாஹ்வின் அருளால் மாபெரும் மகத்துவத்துடன் முன்னறிவிப்புகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றன. எவ்வாறு நான் முதலிலும் கூறினேனோ, M.T.A –வின் மூலமாக உலகின் எல்லா இடங்களிலும் இந்த தூதுச் செய்தி பரவுகிறது. இதுபோன்று முதலில் அச்சடிப்பதற்காக அமிர்தசரஸ் சென்று வந்தார்கள். இன்று காதியானில் அல்லாஹ்வின் அருளால் அனைத்து நவீன வசதிகளுடன் அச்சகம் செயல்பட்டு வருகிறது. புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவன் எனது உண்மைத்துவத்தின் சாட்சியாக மூன்று இலட்சத்யைும் விட அதிகமாக வானத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான். மேலும் வானத்தில் ரமலானில் சூரிய சந்திர கிரகணம் ஏற்பட்டது. இப்போது எவர் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் விஷயத்தை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் குர்ஆனை பொய்ப்பிக்கிறார். மேலும் இறை அடையாளங்களை மறுக்கிறார். மேலும் எவர் நூற்றுக்கணக்கான அடையாளங்கள் இருந்தும் என்னைப் பொய்யனாகக் கருதுகின்றானோ அவர் எவ்வாறு மூஃமினாக இருக்க முடியும்?

எவ்வாறிருப்பினும், ஒரு சில அடையாளங்களை மட்டும் கூறியுள்ளேன். கூறியது போன்று அவை இலட்சக்கணக்கில் உள்ளன. இவை அனைத்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அடையாளமாகும். மேலும் இவை அப்போதோடு நின்று விடவும் இல்லை. மாறாக இந்த தொடர் அல்லாஹ்வின் அருளால் இன்றும் இருக்கிறது. மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அடையாளங்களைக் கண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகிறார்கள். பைஅத் செய்கிறார்கள். ரஸூல் (ஸல்) அவர்களின் பேரன்பரின் பைஅத்தில் இணைகின்றனர். ஒரு சில இடங்களில் அஹ்மதிகளுக்கு கஷ்டங்களைச் சந்திக்கும் நிலைமை உள்ளது. இன்ஷா அல்லாஹ் அவை அனைத்தும் நீங்கக்கூடிய நேரமும் வரும். அதைப் பார்த்து நமது ஈமானிலும் மஃரிஃபத்தும் அதிகமாகும்.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

இறைவனுக்காக பார்வையாளர்கள் இதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இறைவன் அவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக! இறைவன் அந்த அடையாளங்களை நிறுத்தி விடவில்லை. அவன் மீது ஆணையாக! எதுவரை எனது உண்மைத்துவத்தை உலகத்திற்கு வெளிப்படுத்தாத வரை அவன் நிறுத்தமாட்டான். ஆக எனது குரலைக் கேட்கின்ற மக்களே! இறைவனுக்கு அஞ்சுங்கள். மேலும் வரம்பு மீறாதீர்கள். இது மனிதனது திட்டமாக இருந்தால் இறைவன் என்னை அழித்திருப்பான். மேலும் இந்த அனைத்தின் சிறு அடையாளம் கூட இருந்திருக்காது. ஆனால் நீங்கள் பார்க்கிறீர்கள். இறைவனது உதவி என்னோடு இருக்கிறது. மேலும் எண்ணிலடங்கா அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. பாருங்கள்: எதிரிகள் எவ்வாறு என்னோடு முபாஹலா செய்து அழிந்து விட்டார்கள். இறைவனின் அடியார்களே! சற்று சிந்தித்துப் பாருங்கள்! இறைவன் பொய்யர்களோடு இவ்வாறா நடந்து கொள்வான்?

இன்று நான் கூறியது போன்று 125 ஆண்டுகள் ஆகிவிட்டன. மேலும் அல்லாஹ்வின் அருளால் இந்தத் தொடர் வளர்ந்து கொண்டே செல்கிறது. ஆக இவர்கள் மூளையைக் கொண்டு சிந்திக்கமாட்டார்களா? எதிரிகள் தன் எதிர்ப்புகளிலிருந்து விலகிவிட மாட்டார்களா? அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக! மேலும் இவர்கள் காலத்தின் இமாம் மற்றும் மஸீஹ் மவ்வூதை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவர்களாக ஆவார்களாக! எப்போது அல்லாஹ்வின் பிடி வருமோ அவர்கள் எவ்வளவு சக்திவாய்ந்தவர்களாக இருந்தாலும் சரி புற்பூண்டுகளைப் போல் பறந்து விடுவார்கள். மரக்கட்டையைப் போன்று எரிந்து விடுவார்கள். இவர்களுக்கு அறிவு வரட்டுமாக! இவர்கள் அடையாளம் கண்டு கொள்பவர்களாக ஆவார்களாக!

இது அல்லாமல் மீண்டும் நான் இன்று துஆவிற்காக கூற விரும்புகிறேன். சிரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்ய வேண்டிய குறிப்பான தேவை உள்ளது. பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்கும் குறிப்பான தேவை உள்ளது. இதுபோன்று எகிப்தின் அஹ்மதிகளுக்கு ஒரு சில இன்னல்களும் கஷ்டங்களும் உள்ளன. அல்லாஹ் இவர்கள் அனைவரின் கஷ்டங்களையும் நீக்குவானாக! மேலும் இது தொடர்பாகவும் நாம் குறிப்பான அடையாளம் காணக்கூடியவர்களாக ஆவோமாக! இதன் மூலம் தமது மார்க்கத்தை வெளிப்படுத்துபவர்களாவும், அல்லாஹ்வின் பால் குனிபவர்களாகவும் ஆக வேண்டும். நாம் இறைவணக்கம் செய்ய இயலாத தொழ முடியாத அளவுக்கு விதிகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளோம். எல்லா இடங்களிலும் அல்லாஹ் இந்த விதிவிலக்குகளையும் நீக்குவானாக!

இன்று நான் தொழுகைக்குப் பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். அது மதிப்பிற்குரிய லதீஃபா இல்யாஹ் சாஹிபா, Voltinore USA உடையதாகும். 9, மார்ச் அன்று வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். லதீஃபா இல்யாஸ் சாஹிபா ஆப்பிரிக்க அமெரிக்கன் பெண்மணி ஆவார்கள். இவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்று ஏறக்குறைய 50 ஆண்டு காலங்கள் ஆகிவிட்டன. வஃபாத்தின் போது அன்னாரின் வயது 76 ஆகும். மிகவும் எளிமையான, விசுவாசமான, இறையச்சமுள்ள அஹ்மதியாக இருந்தார்கள். கிலாஃபத்தோடும் அளவு கடந்த அன்பு இருந்தது. பள்ளிவாசலுக்குச் சென்று வருவதை மிகவும் விரும்புவார்கள். பின்னால் விட்டுச் சென்றவர்களில் ஒரு மகன் ஜமால் இல்யாஸ் ஆவார். அவரும் விசுவாசமான அஹ்மதி ஆவார்.

இவர்களின் ஜமாஅத் சதர்அவர்கள் எழுதுகிறார்கள்: குறுகிய வசதிவாய்ப்பு இருந்தும் கூட சகோதரி லதீஃபா தனது வீட்டிலிருந்து தூய்மை செய்யக்கூடிய பொருள்களைக் கொண்டு வந்து மணிக்கணக்கில் பள்ளியைச் சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருப்பார்கள். அதிகமாக யாரும் அவர்களைக் காண முடியாத அளவுக்கு எவ்வித வெளிக்காட்டலும் இல்லாதிருப்பதற்காக மக்கள் வராத நேரங்களில் சுத்தம் செய்வார்கள். எப்போதும் தஸ்பீஹ் வ தஹ்மீது சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் செய்து வந்தார்கள். பள்ளியை சுத்தம் செய்யும் போதும், மற்ற நேரங்களிலும் ரமலானிலும் இஃப்தாரிக்கு 2 மணி நேரம் முன்பு பள்ளிக்கு வந்து சமையலறையைச் சுத்தம் செய்வார்கள். மேலும் மக்கள் ஏன் குப்பை போடுகிறார்கள்? என்று ஒருபோதும் புகார் கூறியதில்லை. எப்போதும் மார்க்கத் தொண்டை ஓர் அருளாகக் கருத வேண்டும் என கூறி வந்தார்கள். நடைமுறையிலும் அதன் உருவகமாகவே விளங்கினார்கள். பொதுவாக 70 வயதுகளில் நடந்தே பள்ளிக்கு வருவார்கள். பாதையில் ஏதேனும் அஹ்மதி கடந்து செல்லும் போது கண்ணியத்தின் காரணமாக வண்டியை நிறுத்தி பள்ளியில் விடுவதாக கூறினால் கூறுவார்கள். வேண்டாம். ஹதீஸிற்கேற்ப பள்ளியின் பக்கம் எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடிக்கேற்ப நன்மை உள்ளது. எனவே

என்னை நடந்து செல்ல விடுங்கள் என்று கூறுவார்கள். செக்யூரிட்டி டியூட்டிகளும் கொடுத்து வந்தார்கள். பல ஆண்டுகளாக உள்ளூர் லஜ்னாவில் செகரட்டரி மால் ஆகவும், கித்மத்தே கல்கிற்காகவும் சிறந்த முறையில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். ஒருபோதும் யாருடனும் தனிப்பட்ட வெறுப்பு வைத்ததே இல்லை. குழந்தைகளுடன் மிகவும் கருணையுடன் நடந்து கொள்வார்கள். குத்பா கேட்பதன் பக்கம் குறிப்பான கவனம் இருந்தது. M.T.A –வில் குத்பா கேட்டு அதை பிறர் கேட்பதையும் வலியுறுத்தி வந்தார்கள். தொழுகைக்குச் செல்வதை தமது கடமையாக்கிக் கொண்டார்கள். மகன் ஜமால் இல்யாஸ் ஒரு சில ஜுமுஆவில் செல்ல முடியாத போது ஜுமுஆவுக்கு ஏன் செல்லவில்லை என்று கேட்டார்கள். அவர் கூறினார்: புதிய வேலை காரணமாக விடுமுறை கிடைப்பதில்லை. அவரை குறிப்பாக ஜுமுஆவை விடக்கூடாது என எச்சரித்தார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும், இதன் தாக்கம் மகனிடம் எந்த அளவுக்கு இருந்தது என்றால், அவர் கூறுகிறார்: M.T.A –வில் எனது குத்பா வரும்போது டிரைவிங் செய்யும்போது கூட கேட்டு விடுவார்கள். இவர்களது மகனுக்கும் இப்படிப்பட்ட தர்பிய்யத் இருந்தது.

எழுதக்கூடியவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஓர் அழகான அடையாளமாக விளங்கினார்கள். கிலாஃபத்தின் மீது மாய்ந்து விடக்கூடியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுடன் மக்ஃபிரத்திற்கான நடத்தையை கையாளுவானாக! மேலும் எவர்கள் M.T.A. –வில் குத்பாவிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லையோ மேலும் கேட்பதில்லையோ அவர்களும் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் M.T.A –வுடன் இணைந்து விட்டால், மேலும் அதன் பக்கம் கவனம் செலுத்த ஆரம்பித்தால் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தின் தர்பிய்யத்தின் தரம் மிகவும் உயர முடியும். அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பை அனைவருக்கும் வழங்குவானாக! மர்ஹூமாவின் தர்ஜாவை உயர்த்துவானாக! மேலும் இவரின் மகனுக்கும் இவருடைய நல்வாய்ப்பை தொடரக்கூடிய வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **21.03.2014**

Translated by : Maulavi M.B. TAHIR AHMAD Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456